1987 மார்ச் 24]

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் நீதிமன்றம் நிறுவ அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துவிட்டது. விரைவிலே அது துவக்கப்படவிருக்கிறது. சிவகெங்கையா, காரைக்குடியா என்ற பிரச்சினை எழுந்து, வழக்கறிஞர்கள் மத்தியிலே இது ஒரு போராட்டமாக எழுப்பப்பட்டு, சிவகெங்கையில் ஆரம்பிக்கலாம் என்று ஒரு பிரிவினரும், காரைக்குடியில் ஆரம்பிக்கலாம் என்று ஒரு பிரிவினரும், மனுக்கள் கொடுத்து, உயர்நீதிமன்றம் ஆய்ந்து வருகிறது. விரைவிலே இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திலே கூடுதலான நீதிபதிகளை நியமிக்க ஒரு செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புவதோடு, ஜாதி பிரதிநிதித்துவம் உயர்நீதிமன்ற நியமனத்தில் கொடுக்கப்படுவது என்ற நியதி கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தைப் பொறுத்தவரைக்கும், தகுதியின் அடிப்படையில்தான் அது நியமிக்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தில் காலியுள்ள இடங்களுக்கு நீதிபதிகளை நியமிப்பதற்கு உயர்நீதிமன்றமும், தமிழக அரசும் மத்திய அரசுக்கு பரிந்துரைகள் அனுப்பியிருக்கின்றன.

மயிலாடுதுறையில் கூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றம்

147—(* வினா எண் 9779) திரு. மு. தங்கமணி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறையில் கூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்தித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். இதைப் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கூறுகின்ற பொழுது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மயிலாடுதுறை ஒரு டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ். அதிலே நன்னிலம், மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி போன்ற தாலுக்காக்களிலே வழக்குகள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. வந்துகொண்டிருக்கின்ற வழக்குகளை உடனடியாக பைசல் செய்ய முடியாத நிலையில் வழக்குகள் ஆயிரக்கணக்கில் தேங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே துரிதமாக நடவடிக்கை எடுத்து, வருகிற ஆண்டிலாவது கூடுதலான நீதிமன்றங்களை அமைத்துத் தந்து, அத்தோடு நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்குப் போதிய இருக்கைகள் இல்லாத காரணத்தினால், இடவசதியும், குடிதண்ணீர் இல்லாத காரணத்தினால், குடிதண்ணீர் வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே. ஏற்கனவே நான் கூறியவாறு அங்கே ஒரு "First Class Judicial நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவிலே அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

கோவை சட்டக் கல்லூரியில் சட்ட முதுகலை வகுப்பு தொடங்குதல்.

148—(*வினா எண் 10273) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சட்டக்கல்லூரியில் சட்ட முதுகலை வகுப்பு (Master of Law) தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை.